**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

SC. 32/2023 தேதி 22.01.2026

எ.சா. 1 – வெங்கடலட்சுமி

**( எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**எ.சா. 1 சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–**

1. எனது தம்பி என் மீதும் , எங்கள் குடும்பத்தார்கள் மீதும், OS.No. 261/2014 என்ற வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கு இதே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்த போது புகார் கொடுத்தவரை ஒரு தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த OS.No. 261/2014 என்ற வழக்கின் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ. 15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட பின்னர் தான் 04.08.2021 ம் தேதி இந்த வழக்கின் புகார்தாரரை மேற்படி OS.No. 261/2014 ல் ஒரு தரப்பினராக சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் 11.07.2021 ம் தேதி தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக தான் இவ்வழக்கில் புகார் கொடுத்த நபரை ஒரு தரப்பினராக சேர்த்தோம் என்றால் சரியல்ல.

**( அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Subordinate Judge,
Hosur